https://puthusudar.lk/

puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

15th JANUARY 2024 | WWW.PUTHUSUDAR.LK | MONDAY | ISSUE: 62



# நாமல் ஜனாதிபதி?

## வேட்பாளராக நிறுத்துவதற்கு பின்வரிசை எம்பிக்கள் அழுத்தம்

நாமல் ராஜபக்சவை மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துமாறு கட்சியிடம் கூட்டாக கோரிக்கை விடுவதற்கு மொட்டு கட்சியின் பின்வரிசை எம்பிக்கள் தயாராகி வருகின்றனர் என்று அறிய முடிகிறது.

மொட்டு கட்சி தம்மிக்க பெரேராவை ஜனாதிபதி

02



# ஹவுதிகளுக்கு எதிராக இரண்டு போர் கப்பல்கள்: செங்கடலுக்குச் செல்லத் தயாராகிறது இலங்கை கடற்படை

செங்கடலில் இஸ்ரேல் நோக்கிச் செல்லும் கப்பல்கள்மீது தாக்குதல் நடத்தும் ஹவூதி ஆயுதக் குழுவுக்கு எதிராக சண்டை செய்வதற்காக இலங்கையில் இருந்து கடற்படை குழுவொன்று தயாராகிறது.

இதற்காக கஜபாஹு, விஜயபாகு என்ற இரண்டு கப்பல்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் அந்தக் கப்பல்கள் புறப்படும் தினங்கள்

02




தை பிறந்ததோடு;
வழி பிறக்க...
வாசகர்கள் அனைவருக்கும்
இனிய
தை பொங்கல்
வாழ்த்துக்கள்...



# தேசிய அரசு: ஜனாதிபதி முயற்சி

எதிர்வரும் தேர்தலுக்கு பின் தேசிய அரசை உருவாக்குவது தொடர்பில் ஜனாதிபதி மீண்டும் கவனம் செலுத்தியுள்ளார்.

இது தொடர்பில் பல சுற்று பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.தேசிய அரசில் இணையும் கட்சிகள் தொடர்பில் இந்த வருடம் ஏப்ரல் மாதம் தகவல் வெளியிடப்படும் என்று ஜனாதிபதி வட்டாரம் தெரிவிக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க

02

# ஐரோப்பிய நாடுகளுக்கு தப்பியோடும் குடு வியாபாரிகள்

வெளிநாடுகளில் இருந்துகொண்டு இலங்கையில் போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் முக்கிய வியாபாரிகளை பிடிப்பதற்கான நடவடிக்கையை அரசு ஆரம்பித்திருப்பதால் துபாயில் உள்ள முக்கிய குடு வியாபாரிகள் அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குத் தப்பியோடத் தொடங்கியுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த நாடுகளில் அவர்கள் வேறு வியாபாரங்களில் ஈடுபடுபவர்கள்போல் நடித்துக்கொண்டு நடமாடுகின்றனர் என்று அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன.

இதேவேளை,போதை பொருள் வியாபாரத்தை ஒழிப்பதற்காக இலங்கை அரசு ஆரம்பித்துள்ள "யுக்திய " என்ற வேலை திட்டம் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது என்று அரச தரப்பில் இருந்து கூறப்படுகிறது.



றைனோ சிமென்ட் ரூப்பிங் ஷீட்

சிறந்த விலைக்கு நீண்ட காலம் பாவிக்கக்கூடிய கூரை

ரு. 3,955/- இலிருந்து துரித அழைப்பு 0115748728

• இலங்கையின் முதற்தர ரூப்பிங் மற்றும் சீலிங் ஷீட் • 60 வருட நம்பிக்கை

RHINO
60 YEARS
www.rhino.lk

புதுச்சுடர்
www.puthusudar.lk
2024 JANUARY 15 - MONDAY

# அமெரிக்காவை காக்கா பிடிப்பதற்காக...

நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் வீழ்ந்துகொண்டே செல்கிறது. மக்கள் தொழிலின்றி-உண்ண உணவின்றி துன்பப்படுகிறார்கள்.மக்கள்மீது வரிக்கு மேல் வரியை ஏற்றி மக்களை நசுக்கிக்கொண்டு இருக்கிறது இந்த அரசு.

மக்களை மீட்டெடுப்பதற்கான-அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் அரசு எடுத்ததாகத் தெரியவில்லை.

துன்பப்படுகின்ற மக்களிடம் இருந்து மேலும் மேலும் பிடுங்கி அரச வருமானத்தை அதிகரிக்கிறதே தவிர மக்களுக்கு எதையும்-எந்த உதவியையும் செய்வதாக இல்லை இந்த அரசு.

இந்த நிலையில்தான்-மக்களின் வாழ்வை மேம்படுத்த வேண்டிய நிலையில்தான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தேவையற்ற வேலையொன்றில் இறங்கியுள்ளார்.

அதுதான் யெமன் ஹவூதியுடனான சண்டை.

ஹமாஸ்-இஸ்ரேல் சண்டையின்போது ஹமாஸுக்கு ஆதரவாக களமிறங்கி நிற்கிறது ஹவூதி போராளி குழு.செங்கடல் வழியாக இஸ்ரேலுக்குச் செல்லுகின்ற கப்பல்களை தாக்கியும் கடத்தியும் வருகிறார்கள் ஹவூதிகள்.

இதற்கு எதிராக அமெரிக்க கப்பல் ஒன்றும் பிரிட்டன் கப்பல் ஒன்றும் செங்கடலுக்கு வந்து ஹவூதிகளுடன் சண்டை செய்கிறோம் என்ற பெயரில் யெமன் தலைநகரான சனா மீதி ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது.

இதனால்,சனாவில் லட்ச கணக்கான மக்கள் ஒன்று திரண்டு அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினர். அது மாத்திரமன்றி பிரிட்டன் மற்றும் அமெரிக்காவிலும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதனால் அமெரிக்காவும் பிரிட்டனும் பெரும் அழுத்தத்தை எதிர்நோக்கியுள்ளன.

இஸ்ரேலுக்கு ஆதரவாக இந்த இரண்டு நாடுகளும் களமிறங்கியுள்ளதை அந்த நாடுகளின் மக்கள் ஆதரிக்கவில்லை.அந்த நாடுகளின் மக்கள் காசா அப்பாவி மக்கள்மீதான இஸ்ரேலின் தாக்குதலை கண்டித்து வருகிறார்கள்.

மாபெரும் கொலையாளியான இஸ்ரேலுக்கு ஆதரவாக பிரிட்டனும் அமெரிக்காவும் நிற்பதை அந்த நாடுகளின் மக்களே எதிர்க்கின்ற நிலையில் எமது நாட்டு ஜனாதிபதி அமெரிக்காவையும் இஸ்ரேலையும் சந்தோசப்படுத்துவதற்காக செங்கடலுக்கு கடற்படையை அனுப்புவதற்குத் தயாராகி வருகிறார்.

ஜனாதிபதியின் இந்த செயலை பார்த்து சிரிப்பதா ,அழுவதா என்றே தெரியவில்லை.ஹவூதிகளை எதிர்கொள்ள முடியாமல் அமெரிக்காவும் பிரிட்டனுமே தடுமாறிக்கொண்டிருக்கும் நிலையில் இலங்கையில் இருந்து கடற்படையை அனுப்புவதற்கு ரணில் எடுத்திருக்கும் முடிவை என்னவென்று சொல்வது.

இவர்கள் போய் ஹவூதியை அழிக்க முடியுமா? உலக வல்லரசையே அசைத்துக்கொண்டு இருக்கிறார்கள் ஹவூதிகள். அமெரிக்காவை காக்கா பிடிப்பதற்காக ரணில் செய்யும் இந்த வேலை நகைச்சுவையாகத்தான் இருக்கிறது.

ஒருவேளை அப்படி சென்று கடற்படையின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அது ரணிலின் அரசியலுக்குத்தான் ஆபத்து.தேவை இல்லாமல் அந்த விவகாரத்தில் மூக்கை நுழைத்து எமது படையினரை பலிகொடுத்துவிட்டார் என்ற கெட்ட பெயர் ரணிலுக்கு நிச்சயம் ஏற்படும்.

ஆகவே, நாட்டுக்கு எந்த வகையிலும் நன்மையளிக்காத இந்த செயலை ரணில் விட்டுவிடுவதுதான் நல்லது.

## ஹவுதிகளுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தீர்மானிக்கப்படவில்லை என்றும் பாதுகாப்பு தரப்பு தகவல்கள் கூறுகின்றன.

இந்தக் கப்பலில் ஹெலிகொப்டர்கள் இறங்கக்கூடிய வசதிகளும் உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இடம்பெற்று வரும் இஸ்ரேல் –ஹமாஸ் போரில் ஹமாஸ /க்கு ஆதரவாக களமிறங்கியுள்ள யெமனைத் தளமாகக் கொண்ட ஹவூதிகள் செங்கடல் வழியாக இஸ்ரேல் நோக்கிச் செல்கின்ற கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர் : கடத்துகின்றனர்.

அமெரிக்க கப்பல் ஒன்றின்மீதும் தாக்குதல் நடத்தி அதை அவர்கள் மூழ்கடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில்தான் அமெரிக்காவின் அன்பைப் பெறுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஹவுதிகளுக்கு எதிராக இலங்கை கடற்படையை அனுப்புவதற்கு விரும்புகிறார்.

## தேசிய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதியாக பதவியேற்ற புதிதில் இதுபற்றி பேசப்பட்டது. அதன் பின் அடங்கிவிட்டது.

இப்போது மீண்டும் அதற்கான முயற்சிகள் தொடங்கிவிட்டன.

## நாமல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வேட்பாளராக நிறுத்துவதற்கு முடிவெடுத்திருக்கிறது. ஆனால்,அக்கட்சியின் பின்வரிசை எம்பிக்கள் அதை விரும்பவில்லை.

அவர்கள் நாமல் ராஜபக்ஸ வின் விசுவாசிகள்.நாமலையே வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.அதனால் அவர்கள் கூட்டாக கட்சியிடம் இந்தக் கோரிக்கையை முன்வைப்பதற்குத் தீர்மானித்துள்ளனர் என்று அறிய முடிகிறது.







**கேள்வி: நீங்கள் ஆட்சிக்கு வந்தால் வட் வரியை இல்லாதொழிப்பீர்களா?**

**கேள்வி: அதிகமான வர்த்தகங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.இது நாட்டின் பொருளாதாரத்துக்க அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது.இதை ஏன் ஜனாதிபதி கணக்கில் எடுப்பதில்லை.?**

**கேள்வி: இந்த நிலையில், நீங்கள் ஆட்சியை பாரமேற்றால் நாட்டை கட்டியெழுப்பும் உங்களது அணி எது?**

**கேள்வி: நாடாளுமன்ற ஆட்சியை பிடிப்பதற்கு 113 ஆசனங்கள் தேவை.உங்களிடம் இருப்பது இப்போது 3 ஆசனங்கள் மாத்திரம்தான். அப்படியென்றால் இன்னும் 110 ஆசனங்கள் தேவை.இது பெரிய சவால்.உங்கள் இந்த எண்ணிக்கையை பெற முடியாதுவிட்டால் என்ன செய்வீர்கள்?**

**கேள்வி: அரசாங்கம் இப்போது அதன் வேகத்தை அதிகரித்துள்ளது. உங்கள் கட்சி அந்த வேகத்தை எவ்வாறு எதிர்கொள்கிறது?**

**கேள்வி: 3 லட்சம் பேர் தொழில் தேடி வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். அவர்கள் மீண்டும் நாட்டுக்கு வருவதாக இருந்தால் நீங்கள் வழங்கும் உத்தரவாதம் என்ன?**

# இந்த வருடம் எமது ஆட்சி



இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் ஜேவிபியின் தலைவர் அனுரகுமார திஸ்ஸாநாயக்க.அவரது முழுமையான பேட்டி கீழே்

**கேள்வி : இந்த வருடம் எப்படி இருக்கப் போகிறது?**

பதில் : இந்த வருடம் முக்கியமான மாற்றத்தை இந்த நாட்டில் கொண்டுவரப்போகிறது.அதுதான் ஆட்சி மற்றம் இந்த வருடம் செப்டம்பர்-ஒக்டொபர் மாதங்களுக்கு இடையில் நிச்சயம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும்.ஒக்டொபர் மாதம் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி மலரும்.

இந்த மாற்றம் இப்போது அவசியம்.இருக்கின்ற பொருளாதார சசுமை போதாதென்று வட் வரி மூலம் மேலும் மக்கள்மீது சுமை ஏற்றப்பட்டுள்ளது.

இந்த வரி அறிமுகப்படுத்தப்பட்டு 21 வருடங்களாகின்றன.அன்று முதல் 138 சேவைகள் மற்றும் பொருட்கள் உள்ளடக்கப்படவில்லை.அவை மக்களின் வாழ்வுடன் நெருக்கமானவை என்பதால் அவ்வாறு செய்யப்பட்டது.

இன்று அவற்றில் 97 இற்கு வட் வரி விதிக்கப்பட்டுள்ளது.அவற்றுள் பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள்,வைத்திய சேவைகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் சிறுவர்களின் உணவு பொருட்கள் போன்றவை இந்த வரிக்குள் அடங்குகின்றன.

இந்த வரி விதிப்பின் ஊடாக,பொருளாதார வளர்ச்சி என்று நினைத்துக்கொண்டு ரணில் விக்ரமசிங்க பொருளாதார பிரச்சினை ஒன்றை இப்போது உருவாக்கியுள்ளார்.

இதனால் இப்போது ஆட்சி மாற்றம் ஒன்று நிச்சயம் அவசியம்.இல்லாவிட்டால் இனிமேலும் மக்களால் வாழ முடியாது.

**கேள்வி :நீங்கள் ஆட்சிக்கு வந்தால் வட் வரியை இல்லாதொழிப்பீர்களா ?**

பதில் : மக்களுக்கு பாதகமாக இருக்கின்ற விடயங்கள் அதிலிருந்து நீக்கப்படும்.அந்த வருமானத்தை ஈடு செய்வதற்காக பொருளாதாரம் விரிவாக்கப்படும்.புதிய புதிய வருமான வழிகள் ஏற்படுத்தப்படும்.

அது இப்போது வட் வரியில் இருந்து எதிர்பார்க்கின்ற வருமானத்தை விடவும் அதிக வருமானத்தை ஈட்டித் தரும்.

வேண்டுமென்றே வரி கட்டமைப்புக்கு வெளியே சென்றுள்ள வர்த்தகர்கள் வரி கட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டு வரி அறவிடப்படும்.

**கேள்வி : அதிகமான வர்த்தகங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.இது நாட்டின் பொருளாதாரத்துக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது.இதை ஏன் ஜனாதிபதி கணக்கில் எடுப்பதில்லை.?**

பதில் : அவருக்கு அது தேவையில்லை. அவர் அப்படித்தான்.

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு நிறுவனங்கள் தொடர்பிலும் தனித்தனியாக சோதனை செய்யப்பட வேண்டும்.அவர்களின் பிரச்சினைகள் ஆராயப்பட வேண்டும். ஒவ்வொரு நிறுவனத்துக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சி திட்டம் வழங்கப்பட வேண்டும்.

வரியை அதிகரிக்க அதிகரிக்க பொருளாதாரம் இறுகும்.வர்த்தகத்தின் தன்மைக்கு ஏற்ப வரி தீர்மானிக்கப்பட வேண்டும்.சிலவற்றுக்கு வரியைக் குறைக்க வேண்டும்.சிலவற்றுக்கு வரி நிவாரணம் வழங்க வேண்டும்.

உதாரணமாக,எரிபொருள் விலையேற்றம் காரணமாக 50 வீதமான மீன் பிடி படகுகள் கடலுக்குச் செல்வதில்லை.

அவர்கள் கடலுக்குச் செல்லாமல் எப்படி அந்தத் துறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது? ஆக குறைந்தது அவர்களுக்கு எரிபொருள் நிவாரணம் வழங்கி அந்தப் படகுகளை கடலுக்கு அனுப்ப வேண்டும்.

**கேள்வி : இந்த நிலையில்,நீங்கள் ஆட்சியை பாரமேற்றால் நாட்டை கட்டியெழுப்பும் உங்களது அணி எது ?**

பதில் : நாட்டை கட்டியெழுப்பு அணியாக மக்கள் பார்ப்பது எம்பிக்களை அல்லது அமைச்சர்களை.,ஆனால்,எமது அணியில் அப்படி இல்லை.

ஒவ்வொரு துறையிலும் அனுபவமும் அறிவும் உள்ள நிபுணர்கள் எங்களுடன் உள்ளார்கள். இவர்கள் எம்பிக்களாகவோ அமைச்சர்களாகவோ இல்லாததால் இவர்களை மக்களுக்கு தெரியாது.

புதிய பொருளாதார கலாசாரத்தை ஏற்படுத்துகின்ற அணிதான் எம்மிடம் உள்ளது.திருடர்கள் அல்லர்.

இன்று அமைச்சராகிற ஒருவர் சம்பாதிக்கின்ற நோக்கில்தான் வருகிறார்.இந்த நிலைமை எம்மிடம் இல்லை,

எமது ஆட்சியில் இதுவரை இல்லாத அறிவுபூர்வமான- திறமையான அமைச்சரவையை நாம் அமைப்போம்.

**கேள்வி : நாடாளுமன்ற ஆட்சியை பிடிப்பதற்கு 113 ஆசனங்கள் தேவை. உங்களிடம் இருப்பது இப்போது 3 ஆசனங்கள் மாத்திரம்தான். அப்படியென்றால் இன்னும் 110 ஆசனங்கள் தேவை.இது பெரிய சவால்.உங்கள் இந்த எண்ணிக்கையை பெற முடியாதுவிட்டால் என்ன செய்வீர்கள்?**

பதில் : 3 ஆசனங்கள் உள்ள ஜேவிபி ஆட்சியை பிடிக்கும் என்று எல்லோரும் இப்போது பேசும் நிலைக்கு நாம் கொண்டுவந்துள்ளோம்.ஆகவே,நிச்சயம் நாம் ஆட்சியை பிடிப்போம்.

மக்கள் இப்போது எதிர்பார்த்திருப்பது ஆட்சியை மாற்றுவதற்கான தேர்தல் ஒன்றைத்தான்.அது ஜனாதிபதி தேர்தலாக இருந்தாலும் சரி, நாடாளுமன்ற தேர்தலாக இருந்தாலும் சரி.எந்த தேர்தல் வந்தாலும் நாம் வெல்வோம்.

அப்படி இல்லது 20,30 ஆசனங்கள் வந்தால் மக்கள் எம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதை புரிந்துகொண்டு செயற்படுவோம். ஒருவேளை நூறு போன்ற ஆசனங்களை தந்தால் ஆட்சி அமைப்பதற்கான மிகுதி ஆசனங்களுக்காக சில எம்பிக்களுடன் இணக்கப்பாட்டுக்கு செல்வோம். கட்சியோடு அல்ல.

**கேள்வி : அரசாங்கம் இப்போது அதன் வேகத்தை அதிகரித்துள்ளது.உங்கள் கட்சி அந்த வேகத்தை எவ்வாறு எதிர்கொள்கிறது?**

பதில் : அந்த வேகம் எங்களை சிறிதளவேனும் பாதிக்காது.தேர்தல் வரும்போது இவ்வாறு நாடகமாடுவது சாதாரண விடயம்.அதற்குள் மக்கள் சிக்கமாட்டார்கள்.

இவர்களால் மக்களிடம் சென்று கூறுவதற்கு எதுவுமில்லை.முதல் என்றால் ரணில் அறிவாளி,திறமைசாலி,சர்வதேச தொடர்புகளை கொண்டிருப்பவர். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவார் என்றெல்லாம் கூறினார்கள்.

இப்போது எல்லாம் பொய்யாகிவிட்டது.இப்போது எதைக் கூற போகிறார்கள்.எதுவுமே இல்லை.மக்கள் எழுந்துவிட்டார்.ரணில் தரப்பு என்னதான் கூறினாலும் மக்கள் ஏமாறமாட்டார்கள்.

**கேள்வி : திலித் ஜயவீர உங்களை விவாதத்துக்கு அழைத்துள்ளாரே...?**

பதில் : அவரை நகர சபை தேர்தலிலாவது போட்டியிட்டு உறுப்பினர் பதவியாவது எடுத்துக்கொண்டு வரட்டும்.அப்போது அவருடன் விவாதம் நடத்துகிறேன்.

எமது கட்சியை பற்றி பேசாமல் இவர்களால் அரசியல் செய்ய முடியாத நிலைக்கு எமது அரசியல் தளம் உயர்ந்துள்ளது என்பதைத்தான் இது காட்டுகிறது.

**கேள்வி : 3 லட்சம் பேர் தொழில் தேடி வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர்.அவர்கள் மீண்டும் நாட்டுக்கு வருவதாக இருந்தால் நீங்கள் வழங்கும் உத்தரவாதம் என்ன?**

> மக்களிடம் சென்று கூறுவதற்கு ரணில் விக்ரமசிங்க தரப்பிடம் எதுவுமில்லை. முதல் என்றால் ரணில் அறிவாளி, திறமைசாலி,சர்வதேச தொடர்புகளை கொண்டிருப்பவர். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவார் என்றெல்லாம் கூறினார்கள். இப்போது எல்லாம் பொய்யாகிவிட்டது. இப்போது எதைக் கூற போகிறார்கள்.எதுவுமே இல்லை.மக்கள் எழுந்துவிட்டார்.ரணில் தரப்பு என்னதான் கூறினாலும் மக்கள் ஏமாறமாட்டார்கள்.

பதில் : அவர்கள் தங்கள் குடும்பத்தை நடத்த வேண்டும் என்ற நோக்கில்தான் செல்கிறார்கள். இருந்தாலும்,அவர்களை செல்ல வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.எல்லோரும் ஒன்றிணைந்து இந்த நிலைமையை மாற்றி அமைப்போம் .

**கேள்வி : மக்கள் அதிகாரத்தை வழங்கினால் உங்களால் நாட்டை கட்டியெளழுப்ப முடியும் என்று உறுதி வழங்க முடியுமா?**

பதில் : நிச்சயமாக,,யாரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.-என்றார்.

# மழையில் நனைந்த அமைச்சர்



மழையில் நனைந்தவாறு நாடாளுமன்றத்துக்குள் நுழைந்தார் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க.

இதைக் கண்ட மஹிந்த ராஜபக்ச "" என்ன ..பிரசன்ன நனஞ்சிடீங்க...?"" என்று கேட்டார்.

"சரியான ட்ராபிக் சேர்..நான் வாகனத்த விட்டு இறங்கி.வாகனத்த அங்காள இங்கால போட்டு ஒருமாதிரியா வந்து சேர்ந்த.அதான் மழையில நனஞ்சிட்டேன் ."" என்றார் பிரசன்ன.

"பிரசன்ன எதுக்கும் ரெடிதான்.அதுதான் தலைமைத்துவத்துக்கு அழகு "" என்றார் மஹிந்த பிரசன்னவின் முதுகில் தட்டி...

# மொட்டில் ஜனாதிபதி வேட்பாளர்கள் 6 பேர்

சில நாட்களுக்கு முன் நாமல் ராஜபக்சவுக்கும் பின்வரிசை எம்பிக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கிடையில் நாமலின் இல்லத்தில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்ட எம்பி ஒருவர் தம்மிக்க பெரேராவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதுபற்றி கேள்வி எழுப்பினார்.

"ஏன் தம்மிக்கவ இறக்கிறீங்க.நீங்க இறங்கலாம்தானே ..." என்று எம்பி ஒருவர் நாமலிடம் கேட்டார்.

கட்சி முடிவெடுத்தால் அதற்கு தயார் என்று நாமல் பதில் வழங்கினார்.

மேலும், மொட்டில் போட்டியிடுவதற்கு இப்போதே 4 பேர் உள்ளனர். நானும் பசிலும் போட்டியிடுவதாக முடிவெடுத்தால் வேட்பாளர்களின் எண்ணிக்கை 6 ஆக மாறும் என்றார் நாமல்.

துப்பறிவாளன்





# அமைச்சருக்கு வெளிநாட்டில் இருந்து வந்த கொலை மிரட்டல்

சில நாட்களுக்கு முன் அரசாங்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.அதில் கலந்துகொண்ட அமைச்சர் டிரான் அலஸ் தற்போது இடம்பெற்றுவரும் பாதாள மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை பற்றி கூறினார்.

ஊடக சந்திப்பு இடம்பெற்றதும் தேநீர் அருந்தும் இடத்துக்கு சென்றார் அமைச்சர்.

அப்போது அவரது தொலைபேசிக்கு வெளிநாட்டில் இருந்து அழைப்பு ஒன்று வந்தது.அந்த அழைப்புக்கு பதிலளித்த அமைச்சர் கடும் கோபமாக பேசியதை அவதானிக்க முடிந்தது.

அந்த அழைப்பை அவர் ழரவ ளிநயமநச இல் போட்டு பேசினார்.அந்த இடத்தில் நின்ற மஹிந்தானந்த அழுதகமகே எம்பியின் ஊடக செயலாளர் அதை போனில் பதிவு செய்து கொண்டார்.

அந்த அழைப்பு வெளிநாடு ஒன்றில் இருந்து வந்த கொலை மிரட்டல் அழைப்பாம்.

அழைப்பை எடுத்தவர் வெளிநாட்டில் இருந்துகொண்டு இயங்கும் பாதாள குழு உறுப்பினர் ஒருவராம்.

தற்போது இடன்பெற்று வரும் பாதாள மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையை நிறுத்துமாறு கூறியே அந்த பாதாள உறுப்பினர் மிரட்டி இருக்கிறார்.

எந்தத் தடை வந்தாலும் அதை நிறுத்தப்போவதில்லை என்று அமைச்சர் கூறினார்.



# சஜித்துக்கு புது நோயாம்

ஐக்கிய மக்கள் சக்தி கடந்த வருடம் டிசம்பரில் இறுதி வாரத்தில் பல இடங்களில் பல நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தது.

எல்லா நிகழ்விலும் சஜித் பிரேமதாசா ஓய்வில்லாமல் கலந்துகொண்டார்.

ஏன் இப்படி ஓய்வின்றி வேலை செய்கிறார் என்று ஹெக்டர் அப்புஹாமி எம்பியிடம் ஒருவர் கேட்டார்.

அதற்கு அவர் சொன்னார் சஜித்துக்கு புது நோய் ஒன்று உள்ளது என்று.

"அது என்ன "? என்று வியப்புடன் கேட்டார் அந்த நபர்.

வேலை செய்யாமல் இருக்க முடியாமைதான் அந்த நோய் என்றார் எம்பி.ஆம்..அவருக்கு எந்நேரமும் வேலை செய்துகொண்டேதான் இருக்க வேண்டுமாம்.



# லால் காந்தவால் ஜேவிபிக்குள் குழப்பம்

ஜேவிபியின் முன்னாள் எம்பி லால் காந்த கூட்டங்களில் தெரிவித்து வரும் சில கருத்துக்களால் ஜேவிபிக்குள் புது குழப்பம் ஒன்று ஏற்பட்டுள்ளதாம்.

"ஏனைய கட்சியில் உள்ளவர்களின் குறைகளை நாம் பேசி திரிகிறோம். எமது.கட்சியிலும் குறைகள்–பிரச்சினைகள் உள்ளன.அதுவும் பேசப்பட வேண்டும்" என்று எல்லா மேடைகளிலும் அவர் கூறி திரிகிறார்.

இதனால் கட்சி தலைவர் அனுரகுமார கவலையடைந்துள்ளாராம். இந்த கூற்று கட்சியிக்கு பாதகத்தை ஏற்படுத்தும் என்பதால் லால் காந்தவை இனி மேடைகளில் பேசவிடாமல் ஆக்க வேண்டும் என்று அனுர முடிவெடுத்துள்ளாராம்.



# பிரிந்து போனவர்களுக்கு வலை

எதிர்வரும் தேர்தலில் எப்படியாவது வென்றிவிட வேண்டும் என்ற முனைப்பில் இருக்கிறது மொட்டு கட்சி.அதிலும் கடும் தீவிரமாக இருக்கிறார் நாமல் ராஜபக்ச.

இதற்காக பல வேலைகளை அவர்கள் செய்யத் தொடங்கியுள்ளனர்.அவற்றுள் ஒன்றுதான் மொட்டு கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் கட்சிக்குள் இணைப்பதற்கான முயற்சி.

அதற்காக அவர்கல் இப்போதே களமிறங்கியுள்ளனராம்.

புதுச் சுடர் பத்திரிகையை உங்கள் மொபைளில் பெற்றுக்கொள்ள
WWW.PUTHUSUDAR.LK எனும் இணையதளத்திற்குச் செல்லவும்

# தை பிறந்ததோடு; வழி பிறக்க...

## வாசகர்கள் அனைவருக்கும்




## தை பொங்கல் வாழ்த்துக்கள்...

புது சுடர்





தை பிறந்ததோடு; வழி பிறக்க...
வாசகர்கள் அனைவருக்கும்
இனிய தை பொங்கல் வாழ்த்துக்கள்...







HAPPY PONGAL
தை பிறந்ததோடு; வழி பிறக்க...
வாசகர்கள் அனைவருக்கும்
இனிய தை பொங்கல் வாழ்த்துக்கள்...
புதுச்சுடர்


Fully air conditioned Van.
Passenger Insurance include.
Experienced drivers.
SSD
TRAVELS & TOURS
KDH VAN SERVICES
Wedding Cars, Airport Drops & Pickups, All Island Tours
We will provide the best service for you
More Details
Whatsapp
+9476 072 1400
SSD Travels & TOURS
@travelstours7


Nuzrath Tex
Dealers in Bombay Shalwar & Sarees
36/2, Maha Vidiyalaya Mw.
(Barber Street) Colombo - 13.
011 2 348 791




தை பிறந்ததோடு; வழி பிறக்க...
வாசகர்கள் அனைவருக்கும்
இனிய **தை பொங்கல்** வாழ்த்துக்கள்...

புதுசுடர்

ஹரே கிருஷ்ணா

# ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்

ISKCON

## சர்வதேச கிருஷ்ண பக்தி கழகம்

ஸ்தாபக ஆச்சரியர் அருட்திரு அ.ச. பக்தி வேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதா

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே



188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு – 13.
+94 772288166 +94 112433325
E-mail: info@iskonsrilanka.org Web: www.iskon.lk

புது ஆலயத்திற்கான வர்ணபூச்சு வேலைகளும் மற்றும் முடிவு வேலைகளும் நடைபெற்று கொண்டிருக்கின்றன




ராதா கிருஷ்ணா


சீதா ராம்


ஸ்ரீ பாலாஜி


நரசிம்மர்

உயரமான கோபுரம் தசவதார மூர்த்திகள், பளிங்கு தரைகள் மற்றும் கண்கவர் வேலைபாடுகள்.



வர்ணபூச்சுக்கான மதிப்பீடு
ரூபா.5,000,000/= (5 மில்லியன்)
அன்பான பக்தர்களே நீங்களும்
இச்சேவையில் பங்கு பற்றி
விரைவில் கும்பாபிஷேகம் செய்து
பகவானின் அருளை பெறுவோமாக.

**Bank Detials**

**Commercial Bank**
Bank Branch - Kotahena Branch
Account Name - ISKCON -TEMPLE FUND
Account No. - 1120017042
Swift Code - CCEYLKLX

**Hatton National Bank**
Bank Branch - Jempettah Street
Account Name - ISKCON
Account No. - 207010000891
Swift Code - HBLILKLX

Browns Agriculture




முன்னேற்றத்திற்கான
# பொறிமுறை

Browns YANMAR

BrownsAgriculture

0761 831 343 - சிந்துஜன் | 0772 842 433 - நிஷாகரன் | 0773 457 988 - துஷான்




தை பிறந்ததோடு; வழி பிறக்க...
வாசகர்கள் அனைவருக்கும்
இனிய தை பொங்கல் வாழ்த்துக்கள்...

புதுசுடர்







தை பிறந்ததோடு; வழி பிறக்க...
வாசகர்கள் அனைவருக்கும்
இனிய **தை பொங்கல்** வாழ்த்துக்கள்...

புதுசுடர்







தை பிறந்ததோடு; வழி பிறக்க...
வாசகர்கள் அனைவருக்கும்
இனிய **தை பொங்கல்** வாழ்த்துக்கள்...

புதுசுடர்













தை பிறந்ததோடு; வழி பிறக்க...
வாசகர்கள் அனைவருக்கும்
இனிய தை பொங்கல் வாழ்த்துக்கள்...

புதுசுடர்


THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

14th EDITION Jaffna International Trade Fair

# Jaffna International Trade Fair
# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

JITF 2024

JANUARY ஜனவரி

19 20 21

10.00 மு.ப - 8.00 பி.ப

Muttraweli Grounds
(Next to Jaffna Fort)

முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)




Automobile | Construction | Consumer Goods | Apparel
Hospitality | Agriculture | Travel & Tourism | IT | Education
Beverage, Packaging Industry and many more...

PLATINUM SPONSOR: DIMO THE PERFECT PARTNER
GOLD SPONSORS: ADRIAN SOLAR GREEN | NIPPON CEMENT
MEDIA SPONSORS: PRINT உதயன் | RADIO | TELEVISION Capital | DIGITAL காலைக்கதிர்
ORGANIZED BY: LECS LANKA EXHIBITION
IN ASSOCIATION WITH: CCIY

SILVER SPONSORS: Anchor | Soorya | Hayleys Solar | Zevver | TJC Mango | Darley Butler | Elephant House | Keells Krest | PHOENIX | Rhino | Sera

IMALKA : +94 77 1093792 | imalka@saexhibitions.com www.jitf.lk jitf.lk

# Year on TikTok வெளியீடு





TikTok அதன் ஆண்டறிக்கையான Year on TikTok 2023ஐ வெளியிட்டது. இது அதன் உலகளாவிய சமூகத்தை கொண்டாடும் வருடாந்த ஆண்டு இறுதி அறிக்கையாகும். இது 2023 ஆம் ஆண்டை இலங்கையிலும் உலகின் பிற பகுதிகளிலும் உருவாக்கிய மிகவும் மறக்கமுடியாத சம்பவங்கள், படைப்பாளிகள் மற்றும் தருணங்கள் ஆகியவற்றை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவருகிறது.

இந்த ஆண்டு முழுவதும், ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்களைக் கொண்ட TikTok இன் உலகளாவிய சமூகம், கலாச்சாரம் மற்றும் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும், நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் தளத்தில் தொடர்ந்து ஒன்றிணைந்தது.

சுவையான சமையல் குறிப்புகள் முதல் வேடிக்கையான குறும்புகள், Throwback tracks மற்றும் வளர்ந்து வரும் சிறு வணிகங்கள் வரை, TikTok சமூகம் 2023 முழுவதும் நம்பகத்தன்மையை உருவாக்கி, இணைத்து, கொண்டாடியது.

இலங்கை முழுவதும், சமூகம் சமையலுக்குரிய சுவையான உணவுகள், அழகுக் குறிப்புகள் மற்றும் நகைச்சுவை ஓவியங்களால் ஈர்க்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகள், பிற உள்ளூர் விருப்பங்களுடன், Wild Cookbookஇ் சரியான மசாலா சிக்கன் கறி செய்முறை மற்றும் தினசரி வாழ்க்கை தருணங்களை நகைச்சுவை தருணங்களாக மாற்றும் Hesara Yagidஇ் வேடிக்கையான குறும்பு போன்ற வீடியோக்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.




# பத்தாவது ஆண்டில் நவலோக்க உயர்கல்வி நிறுவனம்

இலங்கையின் உயர்கல்வித் துறையில் புதிய மைல்கல்லைப் பதித்த நவலோக்க உயர்கல்வி நிறுவனம், கல்விச் சேவைகளுக்கான தனது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தும் வகையில் தனது பத்தாவது ஆண்டில் காலடியெடுத்து வைக்கிறது.

2014 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட நவலோக்க உயர்கல்வி நிறுவனம், அவுஸ்திரேலியாவின் முன்னணி பல்கலைக்கழகங்களில் ஒன்றான ஸ்வின்பர்ன் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்து, இலங்கையில் மாணவர்களின் நிலைத்தன்மை, வளர்ச்சி மற்றும் தெளிவான எதிர்காலத்திற்காக உயர் கல்வியை வழங்குவதற்கான பாரிய பணியில் ஈடுபட்டுள்ளது.

நவலோக்க உயர்கல்வி நிறுவகத்தின் கல்விப் பணி மற்றும் புத்தாக்கம், ஸ்வின்பர்னுடனான தொடர்பை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், கல்வித் துறையில் உள்ள பாரிய பல்கலைக்கழகங்களுடன் இணைந்து இலங்கையின் உயர்கல்வித் துறையை தரம் வாய்ந்த புதிய பரிமாணத்திற்கு கொண்டு செல்வதில் ஈடு இணையற்ற பங்களிப்பைச் செய்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், நவலோக்க உயர்கல்வி நிறுவனத்தின் கல்விப் பணி மற்றும் புத்தாக்கமும் ஆஸ்திரேலிய உயர்கல்வி நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒரு தசாப்த கால அனுபவத்துடன் நவலோக்க உயர்கல்வி நிறுவனம் எதிர்காலத்தில் இலங்கையின் உயர்கல்வியில் உந்து சக்தியாக மாற திட்டமிட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் ஸ்வின்பர்ன் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் எதிர்காலக் கல்வியின் துணைவேந்தர் ப்ரோன்டே நெய்லேண்ட், “ஸ்வின்பர்ன் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கும் நவலோக்க உயர்கல்வி நிறுவனத்திற்கும் இடையிலான நீண்டகால உறவு இரு நிறுவனங்களுக்கும் மிகவும் முக்கியமானது மற்றும் பயனுள்ளது என்று நான் நம்புகிறேன். மேலும், இலங்கையை மையமாகக் கொண்ட கல்விச் சேவைகளை வழங்கி 2024ஆம் ஆண்டுக்குள் பத்து வருடங்களை நிறைவுசெய்துள்ளோவோம் என்பதால், எதிர்காலத்தில் அதிக தொடர்புகளைப் பேணுவதே எமது நோக்கமாகும்.” என தெரிவித்தார்.

# Softlogic Life இற்கு 03 விருதுகள்



இலங்கையின் இரண்டாவது பெரிய ஆயுள் காப்புறுதி நிறுவனமான Softlogic Life ஆனது அதன் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஆளுகை மற்றும் பேண்தகைமை என்பனவற்றிற்கான தனது நிலைப்பாட்டினை உறுதிப்படுத்துவதன் மூலம், 58-வது CA TAGS விருது வழங்கல் விழாவினில் பல விருதுகளினைத் தனதாக்கிக் கொள்வதன் மூலம் சிறந்த செயல்திறனை வெளிக்காட்டியுள்ளது.

மேலும் இந்நிறுவனமானது நான்கு முக்கிய விருதுகளினை தனதாக்கிக் கொள்வதன் மூலம், எம் நாட்டின் பலம் வாய்ந்த பெருநிறுவனங்களில் ஒன்றாக தனது திறமையினைப் பறைசாற்றியுள்ளது.

இச்சாதனைகள், இலங்கையில் நிதி அறிக்கையிடல் நடைமுறைகளினை மேம்படுத்துவதற்கான அதன் தொடர்ச்சியான முயற்சிகள் ஊடக நிறுவனத்தின் வெளிப்படைத்தன்மை மற்றும் ஆளுகை என்பன வற்றிற்க்கு Softlogic Life இன் அர்ப்பணிப்பினை அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது.

உறுதிபாடற்ற சந்தை நிலவரம் மற்றும் கடினமான பொருளாதார நிலைமைகளின் சவால்களுக்கு முகம் கொடுத்த போதிலும், Softlogic Life ஆனது குறிப்பிடத்தக்க வெற்றியினைப் பெற்றுள்ளது,

இது தொடர்ச்சியான அதன் வர்த்தகம் தொடர்பான வேகத்தையும் தனிச்சிறப்புவாய்ந்த நிதி ஆற்றலினையும் நிரூபிக்கின்றது.

இச்சாதனைகள் இந்நிறுவனத்தினை இலங்கையின் காப்புறுதித் துறையில் மிகவும் செல்வாக்கு மிக்கதொன்றாகவும், எம்நாட்டின் பெருநிறுவனத் துறையின் உயர் மட்டத்திலும் செல்வாக்குமிக்க வீரராக நிலைநிறுத்தி இருக்கின்றது.



# FACETS Sri Lanka 2024 கண்காட்சி

இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் (SLGJA), தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையுடன் (NGJA) இணைந்து ஆசியாவின் முதன்மையான இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண கண்காட்சியான FACETS கண்காட்சியின் 30ஆவது பதிப்பின் ஆரம்ப விழாவை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.

இந்த பிரம்மாண்டமான ஆரம்பவிழா விழா 2024 ஜனவரி 06 ஆம் திகதி கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலின் ஏட்ரியம் லொபியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் அதிதிகளாக, தொழில்துறை தலைவர்கள் மற்றும் ஆர்வலர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

அவருடன் ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் (NGJA) தலைவர் விராஜ் டி சில்வா, ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் (EDB) தலைவர் கலாநிதி கிங்ஸ்லி பேர்னாட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கையின் இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்களின் செழுமையான பாரம்பரியத்தின் கொண்டாட்டமாக FACETS கண்காட்சிகள் எப்பொழுதும் திகழ்ந்து வருவதோடு, இந்த வருடமும் அது விதிவிலக்கல்ல.

இந்த கண்காட்சியானது, உலகெங்கிலும் உள்ள புகழ்பெற்ற கொள்வனவாளர்களை ஈர்க்கும் வகையில், நாட்டின் தனித்துவமான இரத்தினக்கற்களின் சேகரிப்பை உலகிற்கு வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# யூனியன் வங்கி John Keells Properties இணைவு



வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட நிதி நெகிழ்வுத் தன்மை மற்றும் கனவு இல்லத்திற்குத் தடையற்ற அணுகலை வழங்கும் வகையில் John Keells Properties நிறுவனத்தின் புதிய குடியிருப்புத் திட்டமான ஜா-எல Viman குடியிருப்புத் திட்டத்திற்கு கவர்ச்சிகரமான அடமான வசதியை வழங்குவதற்காக இலங்கையின் ரியல்எஸ்டேட் துறையில் முன்னணி நிறுவனமாக விளங்கும் John Keells Properties நிறுவனம் யூனியன் வங்கியுடன் கூட்டாண்மையை ஏற்படுத்தியுள்ளது.

குறைந்துள்ள வட்டி வீதங்கள் மற்றும் நிலையான வருமானம் தரும் வாய்ப்புக்கள் குறைந்துள்ள இன்றைய நிதிச் சூழலில், ரியல்எஸ்டேட் ஒரு சிறந்த வாய்ப்பாக மாறியுள்ளது. John Keells Properties நிறுவனத்துடன் இணைந்து யூனியன் வங்கியினால் வழங்கப்படும் புத்தாக்கமான அடமான வசதிகள் வருங்கால வீட்டு உரிமையாளர்களுக்கு ஜா-எல ஏஐஅயபெ குடியிருப்புத் திட்டத்தை அணுகுவதற்கு தனிப்பயனாக்கப்பட்ட நிதித் தெரிவுகளை வழங்க உதவுவதுடன், அவர்களின் கனவு இல்லத்தில் வாழ்வதற்கான அபிலாஷை களையும் நனவாக்குகிறது.

இந்தக் கூட்டாண்மை குறித்துக் கருத்துத் தெரிவித்த John Keells Properties நிறுவனத்தின் சொத்து முகாமைத்துவத்தின் தலைவரும், John Keells Group இன் உபதலைவருமான திரு.ருசிரு அபேசிங்க குறிப்பிடுகையில், "எமது வாடிக்கையாளர்களின் நிதி ரீதியான நலன்புரி தொடர்பில் புத்தாக்கமான தீர்வுகளை வழங்குவதில் John Keells Properties நிறுவனம் அர்ப்பணிப்புடன் உள்ளது என்பதையும், கொள்வனவு செய்பவர்கள் தமது வாழ்க்கைமுறையை சமரசம் செய்துகொள்ளாது எதிர்காலத்தில் முதலீடு செய்வதை வலுப்படுத்தத் தயாராக உள்ளது என்பதையும் இந்தக் கூட்டாண்மை எடுத்துக்காட்டுகிறது.

இணையற்ற தொடர்பு, பசுமையான சுற்றாடல் மற்றும் நிலைபேறான வாழ்க்கைக்கான அர்ப்பணிப்பு என்பவற்றின் மூலம் ஜா-எல Viman நவீன வாழ்க்கையை மறுவரையறை செய்து, ஒரு அமைதியான சூழலில் சமூகத்தின் உண்மையான உணர்வை உருவாக்கி, அதிக ஆர்வலர்கள் தங்கள் கனவு வீட்டில் எளிதாக முதலீடு செய்ய உதவுகிறது." என்றார்.



# BYD விற்பனையில் சாதனை

BYD 2023-ஐ விற்பனையில் சாதனை படைத்து நிறைவு செய்துள்ளது, 3 மில்லியன் வருடாந்த விற்பனை இலக்கை தாண்டியதன் மூலமாக, தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக உலகளாவிய புதிய ஆற்றல் வாகன (New Energy Vehicle - NEV) விற்பனை சாதனையாளராக மாறியுள்ளது.

இந்த ஆண்டு, BYD முதல் முறையாக உலகளாவிய ரீதியில் கார் விற்பனையில் முதல் 10 பேர் கொண்ட பட்டியலில் இடம்பிடித்துள்ளது. சீன சந்தையில், BYD சிறந்த விற்பனைக்குரிய கார் பிராண்ட் மற்றும் உற்பத்தியாளர் என்ற தனது நிலையை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

டிசம்பர் மாதத்தில் மட்டும் 341,043 அலகுகள் விற்பனையாகியுள்ளது, இது 45% அதிகரிப்பாகும், ஆண்டு முழுவதும் மொத்தமாக 3,024,417 வாகனங்கள் விற்பனையாகி, முந்தைய ஆண்டை விட விற்பனையில் 61.9% உயர்வை எட்டியுள்ளது.

ஏற்றுமதி மற்றும் உலகமயமாக்கலில் முன்னேற்றம் 2023 ஆம் ஆண்டில், BYD இன் சர்வதேச சந்தையின் பிரசன்னம் குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்தது, ஏற்றுமதிகள் 334.2% ஆல் அதிகரித்து 242,765 அலகுகள் 6 கண்டங்களில், 70 நாடுகளில் விற்பனையாகியுள்ளது.

இலங்கையில் உள்ள மிகப் பெரிய பட்டியலிடப்பட்ட குழுமமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் (John Keells Holdings PLC) உடன் ஏற்படுத்திக் கொண்ட கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் டீலுனு தனது பிரசன்னத்தை தெற்காசிய வலயத்திலும் வியாபித்துள்ளது.

# 75 வருடங்களைக் கொண்டாடும் Hameedia



இலங்கையின் முன்னணி ஆண்களுக்கான ஆடை வர்த்தக நாமமான ஹமீடியா, அதன் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, பண்டிகைக் காலத்துக்காக வடிவமைக்கப்பட்ட "வாழ்க்கையைக் கொண்டாடுதல்" என்ற தொனிப்பொருளின் கீழ் ஒரு சிறப்பான ஆடைகளின் வரிசையை வெளியிட்டது.

பருவகால சேகரிப்புகள் நவீன மனிதனின் பேஷன் ஆர்வத்தை மேம்படுத்த வடிவமைக்கப்பட்ட ஆண்கள் ஆடைத் தீர்வுகளின் விரிவான வரிசையை உள்ளடக்கியது.ரெடிமேட் முதல் அளவீடுகளுக்கேற்ப தயாரிக்கப்பட்டவை வர, பிரத்தியேக வடிவமைப்புகள் மற்றும் துணை கருவிகள் வரை, ஹமீடியா பல்வேறு தேர்வுகளை வழங்குகிறது.

விழாக்களுக்கான, ஸ்மார்ட் கே/வல், சாதாரண, கைத்தறி, சூட்கள், சட்டைகள், பிளேசர்கள், கால்சட்டைகள் மற்றும் காலணிகள், பெல்ட்கள் மற்றும் துணைக்கருவிகள் உட்பட தோல் தயாரிப்புகளின் பிரத்தியேக வரிசையைக் கொண்டுள்ளது, இது ஆடை சேகரிப்பை முழுமையாக பூர்த்தி செய்கிறது.

ஹமீடியாவின் உள்ளடக்கத்திற்கான அர்ப்பணிப்பு அதன் ஆண்கள் ஆடைத் தீர்வுகளில் தெளிவாகத் தெரிகிறது, ஒரு வயது வரை உள்ள சிறு ஆண் பிள்ளைகளுக்கான ஆடைகள் முதல் அந்திம வயதில் மூத்த குடிமக்களுக்கான ஆடைகள் வரை. இந்த வர்த்தக நாமம் தடம் பதித்துள்ளது.

திருமண சந்தையில் குறிப்பிடத்தக்க அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது, அங்கு மணமகனும் அவரது சுற்றத்தாரும் மிகவும் நாகரிகமான ஆண்களுக்கான சிறந்த ஆடைகளில் தங்களை அலங்கரிக்கலாம். ஹமீடியா, ஆண்களுக்கான ஆடைகள் மட்டுமல்லாது பெண்களுக்கான ஆடைகளின் விரிவான வரிசையையும் வழங்குகிறது.

# சிறுநீரகக் கல் சிகிச்சைக்கான வசதியை மேம்படுத்தும் Hayleys Lifesciences




நாட்டிலுள்ள அதிநவீன பகுப்பாய்வு, அறுவை சிகிச்சை, கதிரியக்க உபகரணங்கள் மற்றும் பாவனைப் பொருட்களின் முன்னணி விநியோகஸ்தரான Hayleys Lifesciences (Pvt) Ltd நிறுவனம், சிறுநீரகக் கல் சிகிச்சைக்கான (urological stone treatment) அணுகலை மேம்படுத்துவதற்காக அதிநவீன Dornier Medilas H140 I அறிமுகப்படுத்தியுள்ளது.

நாட்டில் சிறுநீரக நோயாளிகள் அதிக அளவில் காணப்படுகின்றதும், அதற்கான மேம்பட்ட சிகிச்சை வசதிகள் பற்றாக்குறை உள்ள வேளையிலும் ஏற்பட்டுள்ள சமூக தேவையை இந்த தொழில்நுட்பம் நிவர்த்தி செய்கிறது.

Dornier MedTech நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட Medilas H140 இயந்திரம், ஒரு அதிநவீன Holmium: YAG Laser ஆகும். இது சிறுநீரகக் கல் பிரச்சினை கொண்ட நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதில், துல்லியத் தன்மையையும் பாதுகாப்பு அம்சத்தையும் ஒருங்கிணைப்பதன் மூலம், இலங்கையில் சிறுநீரகக் கல் சிகிச்சைக்கான புதிய தரநிலையை அமைக்கிறது.

தற்போதைய சந்தையில் காணப்படும் அதிக ஆற்றல் கொண்ட ஒரு Holmium: YAG Laser ஆக இது காணப்படுகின்றது. ஒரே சாதனத்தில் லேசர் மற்றும் morcellator ஆகியவற்றை திறனாக இணைப்பதன் மூலம், இந்த இயந்திரம் பாதுகாப்பாகவும் வேகமாகவும் சிறுநீரகக் கற்களை அகற்றுகிறது.

Dornier Medilas H140 இயந்திரமானது அநுராதபுரம் மற்றும் களுத்துறை போதனா வைத்தியசாலைகளில் காணப்படுகின்றது.




# வருகின்றன Brooks Running பாதணிகள்

உலகின் அதிவேகமாக வளர்ந்து வரும் தடகள பாதணி பிராண்டான Brooks Running, அதன் உள்ளூர் பங்காளியான Asriel Holdings (Pvt.) Ltd உடன் இணைந்து, அண்மையில் பிராண்டின் உத்தியோகபூர்வ அறிமுகப்படுத்தலை செய்தது.

Warren Buffet's Berkshire Hathaway Inc. இன் துணை நிறுவனமான Brooks Running என்பது செயல்திறன் மற்றும் புத்தாக்கத்துக்கு ஒத்ததாக வேகமாக வளர்ந்த ஒரு பிராண்ட் ஆகும்.

அமெரிக்காவில் 25% சந்தைப் பங்கையும், கடந்த ஆண்டில் மட்டும் இந்தியாவில் 100% ஆண்டு விற்பனை வளர்ச்சியையும் பெற்றுள்ளது, Brooks Running விளையாட்டு வீரர்கள் மத்தியில் மிகவும் விருப்பமான பிராண்டாக உலகம் முழுவதும் பெருகிய முறையில் போற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

"Brooks Running விளையாட்டு வீரர்களுக்கு சீரான சிறந்த ஓட்ட அனுபவத்தை வழங்குகிறது. பொறியியல், Biomechanics மற்றும் 3D Printing தொழில்நுட்பத்தில் அறிவியல் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தி, விளையாட்டு வீரர்களின் விளையாட்டின் மிக உயர்ந்த மட்டத்தில் செயல்படும் விளையாட்டு வீரர்களுக்கு நிகரற்ற சௌகரியம், செயல்திறன் மற்றும் நீடித்துழைப்பு ஆகியவற்றை வழங்கும் தடகள பாதணிகளை உருவாக்குவதற்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பை இது காட்டுகிறது.

# பிரித்தானிய இளவரசி Anne MAS ஹோல்டிங்ஸ் நிறுவனத்திற்கு விஜயம்



பிரித்தானியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு இராஜதந்திர உறவுகளின் 75 வருட பூர்த்தியை முன்னிட்டு, பிரித்தானியாவின் இளவரசி Anne உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வந்திருந்தார்.

இந்த விஜயத்தின் போது,இளவரசி Anne, அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் திமதி லோரன்ஸ் மற்றும் அரச தூதுக்குழு மற்றும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் மேதகு அன்ட்ரூ பேட்ரிக் ஆகியோர், கட்டுநாயக்கவில் உள்ள MAS ACTIVE தயாரிப்பு உருவாக்கம் மற்றும் மேம்பாட்டு மையம் ஆயுளு ஸைஅயயயெவிற்கு விஜயம் செய்தனர்.

அங்கு அவருக்கு மிகுந்த வரவேற்பு வழங்கப்பட்டது. MAS Holdings இலங்கையின் மிகப்பெரிய ஆடை ஏற்றுமதியாளர் மற்றும் நாட்டின் மிகப்பெரிய தனியார் துறை வேலை வழங்கும் நிறுவனமாகும்.

MAS Nirmaanaவில் அவர்கள் நிறுவனத்தின் ஆடை நிபுணத்துவம் மற்றும் கண்டுபிடிப்பு திறன்களைக் காணும் வாய்ப்பைப் பெற்றனர்.

MAS Holdings குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுரேன் பெர்னாண்டோ மற்றும் MAS Active இன் பிரதம நிறைவேற்று அதிகாரி முடித பெர்டினாண்டோ ஆகியோர் இந்த கண்காணிப்புச் சுற்றுப்பயணத்திற்கு இராஜரீகமான பிரதிநிதிகளுடன் ஒன்றிணைதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## DFCC ஜூனியர் சிறுவர் சேமிப்புக் கணக்கின் விசேட ஊக்குவிப்பு அறிமுகம்




DFCC ஜூனியர் கணக்குதாரர்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட விசேட ஊக்குவிப்பொன்றை DFCC வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

தனித்துவமான இந்த சலுகையின் ஒரு அங்கமாக, ரூபா 7,500 அல்லது அதற்கு மேற்பட்ட தொகை கொண்ட ஒவ்வொரு வைப்புக்கும் டிஜிட்டல் ஸ்மார்ட் LED கடிகாரமொன்றை கணக்குதாரர்கள் இலவசமாகப் பெற்றுக்கொண்டனர்.

மேலும், இத்திட்டத்தின் பல்வேறு தொகைகள் மற்றும் அதற்குரிய பரிசுகளின் அடிப்படையில் மேலும் பல அன்பளிப்புக்களை சிறுவர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

நிலைபேண்தகமை, கல்வி மற்றும் வாழ்க்கையின் இலட்சியங்களை முன்னெடுத்தல் ஆகியவற்றை வளர்க்க வேண்டும் என்ற விழுமியங்களுக்கு இணங்க, தனது கணக்குதாரர்களுக்காக அவர்களின் ஈடுபாட்டை வளர்க்கும் செயல்பாடுகளை DFCC ஜூனியர் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்துள்ளது.

ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் சிறுவர் தினத்தைக் கொண்டாடும் முகமாக தனது கிளை வலையமைப்பின் மத்தியில் பல்வேறு தொடர் நிகழ்வுகளை வங்கி ஏற்பாடு செய்திருந்தது.

சித்திரம் வரைதல் மற்றும் கட்டுரைப் போட்டிகள், மரநடுகை முயற்சிகள், விளையாட்டு மற்றும் திறமைகளை வெளிக்கொண்டு வரும் போட்டிகள், சுகாதார மற்றும் மருத்துவ முகாம்கள், அறிவுபூர்வமான செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் பல நிகழ்வுகள் ஆண்டு முழுவதும் முன்னெடுக்கப்பட்டன.

## Colombo Motor Show 2023இன் உத்தியோகபூர்வ வங்கிப் பங்குதாரராக செலான் வங்கி



செலான் வங்கி, இலங்கையின் மிகப்பெரிய சர்வதேச மோட்டார் மற்றும் மோட்டார் பாகங்களின் கண்காட்சியான Colombo Motor Show 2023இன் உத்தியோகபூர்வ வங்கிப் பங்குதாரராக தொடர்ந்து 6ஆவது வருடமாக இணைந்தது.

இந்நிகழ்வு சிறிமாவோ பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நவம்பர் 17ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை நடைபெற்றதுடன் 60,000க்கும் அதிகமான பார்வையாளர்களை ஈர்த்தது.

Colombo Motor Show உடனான செலான் வங்கியின் இணைவு, வாகனத் துறையில் நிதி வலுவூட்டல் மற்றும் அணுகல்தன்மைக்கு வழிவகுப்பதற்கான வங்கியின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றது.

இந்நிகழ்வில் வங்கியின் பரந்த அளவிலான சேவைகள் பற்றியும் அதன் தீர்வுகள் தொடர்பாகவும் பங்கேற்பாளர்கள் நேரடியாகத் தெரிந்து கொண்டதுடன் குறிப்பாக சிறப்பு வட்டி வீதங்களைக் கொண்ட வங்கியின் லீசிங் வசதிகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

Colombo Motor Show 2023இல் மோட்டார் வாகனங்கள், மோட்டார் பாகங்கள், உதிரிப்பாகங்கள், lubricants, டயர்கள் மற்றும் பட்டரிகள் என அனைத்தையும் உள்ளடக்கிய 200 காட்சிகூடங்கள் வைக்கப்பட்டிருந்தன.

## Prime Lands Residencies PLC இன் புதிய நிறைவேற்றுத் தலைவர்



வீட்டு மனைத் துறையில் முன்னணி வகிக்கும் Prime Lands Residencies PLC தலைமைத்துவ மாற்றம் ஒன்றை அறிவித்துள்ளது.

நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் நிறைவேற்றுத் தலைவராக 2024 ஜனவரி 01 முதல் சந்தமினி பெரேரா பதவியேற்றுள்ளார். 2021 பொதுப் பங்கு வழங்கலில் இருந்து 03 வருடங்களுக்கு கிட்டிய அர்ப்பணிப்புடனான சேவையை வழங்கி பதவியிலிருந்து நீங்கும் இணைத்தலைவர் பிரேமலால் பிராமணகேவிடம் இருந்து அவர் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார்.

Prime Lands Residencies PLC முமத்தின் இணை ஸ்தாபகரான சந்தமினி பெரேரா, 2005 முதல் Prime Lands Residencies PLCஇனது நிறைவேற்றுப் பணிப்பாளராக பணியாற்றியுள்ள அதேவேளை, இணைத்தலைவர் பதவியையும் வகித்துள்ளார்.

அவர் அங்கு வகித்த பொறுப்பைத் தவிர, வேறு பல நிறுவனங்களில் பணிப்பாளராகவும் செயற்படுகின்றார். வீட்டு மனைத் துறையில் 27 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்துடன், சந்தமினி பெரேரா தனது புதிய பொறுப்பில் அடியெடுத்து வைக்கும்போது தன்னிகரற்ற தலைமைத்துவ தேர்ச்சியை நிறுவனத்திற்குப் பெற்றுத்தருவது சிறப்பானது.